கோடி நிதி ஒதுக்கப்பட்டும் இன்னும் பணி துவங்கப்படவில்லை. இந்த ஆண்டு அந்தப் பணியை முடித்து, மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வருமாறு அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

(அஈ) கிருஷ்ணகிரி–பாண்டிச்சேரி தேசிய நெடுஞ்சாலை, அகற்றப்பட்ட அம்பேத்கர் சிலையை சொந்த இடத்தில் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 40 ஆண்டு காலமாக கிருஷ்ணகிரி–பாண்டிச்சேரி தேசிய நெடுஞ்சாலையில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் சிலை இருந்தது. அது 16–9–2016 அன்று அரசின் மூலமாக அகற்றப்பட்டது. அகற்றப்பட்ட சிலை பேரூராட்சியில் இருக்கிறது. நாங்கள் சொந்த இடம் வாங்கி விட்டோம். சொந்த இடத்திலே அந்தச் சிலையை அமைப்பதற்கு அரசு அனுமதிக்குமா என்பதைக் கேட்டு, அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

(அஉ) துறைமுகம் தொகுதி, தங்கசாலை தெருவிலுள்ள முருகன் கோயிலைப் புனரமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கசாலை தெருவில் முருகன் திருக்கோயில் அமைந்திருக்கின்றது. 'வேல் உண்டு வினை இல்லை, மயில் உண்டு குறையில்லை, கோல் உண்டு குறைவில்லை' என்று சொல்வார்கள். இந்த வார்த்தைகளுக்குச் சொந்தமான அந்தக் கோயிலில் மலைபோல அமைந்திருக்கின்ற கோபுரம் இருக்கும். படிகலிங்கம் அந்தக் கோயிலில் மட்டும்தான் இருக்கின்றது. பின்னால் ஆரத்தி காட்டினால் முன்னால் ஜொலிக்கும். அந்தக் கோயில் இன்றைக்கு முழுவதுமாக பக்தர்களுக்குப் பயன்பாடு இல்லாமல் இருக்கிறது. 'வறண்டுபோன நிலங்கள் எல்லாம் வற்றாத நதியைப் பார்த்து ஆறுதல் அடையும்; அந்த நதியே காய்ந்துபோனால் துன்பப்படுவோர் தெய்வத்திடம் முறையிடுவார்கள்; அந்தத் தெய்வமே கலங்கி நின்றால், அந்தத் தெய்வத்துக்கு யாரால் ஆறுதல்*

சொல்ல முடியும், என்று சொல்வார்கள் அந்தக் கோயிலைப் புனரமைத்து, தெய்வ வழிபாட்டிற்கு வழிவகை செய்யுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

(அஊ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, கருப்பூர்– தில்லைநாயகபுரம் சாலையைச் சீரமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரம், தீரம், தியாகம் என்று மூன்று முழக்கங்களை இந்த மாமன்றத்தில் நிலைக்கச் செய்த எங்கள் மண்ணின் மைந்தர் பெரியவர் திரு. எஸ்.எஸ். இராமசாமி படையாட்சியார் அவர்களுடைய திருவுருவப் படத்தை தங்கள் தலைமையின்கீழ் இங்கே திறந்து வைத்த தங்களுக்கும், சொல்லிய சொல்லை நிறைவேற்றிக் காட்டிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் ஓ.பி.எஸ். அவர்களுக்கும், பேரவைச் செயலாளர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை எங்கள் மாவட்ட மக்களின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், உரையை முடியுங்கள்.*

திரு. என். முருகுமாறன்: *கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதியில் குமராட்சி ஒன்றியத்திலே அமையப்பெற்றிருக்கிற கொள்ளிட கரை சாலை கருப்பூரிலிருந்து தில்லைநாயகபுரம் வரையிலான சாலை பழுதடைந்திருக்கிறது. அந்தச் சாலை ஊரக வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், அதிலே சிறப்புக் கவனம் செலுத்தி, அந்தச் சாலையைச் சீரமைத்துத் தருமாறு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

(அஎ) வந்தவாசி பொது மருத்துவமனை, சி.டி. ஸ்கேன் மற்றும் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதிகள் ஏற்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார் அவர்கள்.*